சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

பேருந்து வசதி

***62—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுமன்னார்கோவில் பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார். ஏற்கெனவே காட்டுமன்னார்கோவில் அருகில் உள்ள சிதம்பரத்திலிருந்து திருப்பதிக்கு இரண்டு அரசுப் பேருந்துகள் இயங்கி கொண்டிருக்கின்றன என்பதையும், மேலும் அவர் வைத்துள்ள கோரிக்கை தமிழ்நாடு மற்றும் ஆந்திர அரசுகளுக்கிடையிலான கோரிக்கை என்பதால், இரண்டு மாநில அரசுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதன் அடிப்படையில் மட்டுமே பேருந்துகளை இயக்க இயலும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவுகோலே இல்லாத அன்பாய்! சுயநலமே இல்லாத இதயமாய்! வெறுப்பே இல்லாத ஒளிமுகமாய்! வார்த்தைகளே இல்லாத வடிவமாய்! வரிக்கு வரி, வரியே இல்லாத நிதிநிலை அறிக்கை தந்த வள்ளலாய் விளங்கும் மாட்சிமைகள் நிறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர் பாதங்களை முதற்கண் பணிவோடு பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் கி.பி. 823-ல் சதுர்வேதமங்கலம், திருமாளிகையில் பிறந்தவர் நாதமுனிகள். 12 ஆழ்வார்கள் பாடிய நாலாயிர திவ்யபிரபந்தம் மறைந்த நிலையில், நாலாயிர திவ்யபிரபந்தம் எனும் தமிழ் வேதத்தைக் கண்டறிந்து, பண் அமைத்து பாருக்கு வழங்கியவர். அரையர்சேவை என்னும் இறைவழிபாட்டினை அருளியவர். இது இன்றும் ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீமேல்கோட்டை திருக்கோயில்களில் நடைபெற்று வருகின்றது. இவரது பேரன் ஸ்ரீஆளவந்தார் அவர்கள் பிறந்த இடமும் காட்டுமன்னார்கோவில் தான். காட்டுமன்னார் என்னும் ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் அருள் பாலிக்கிற வைணவ அவதாரத் திருத்தலங்களில் முதன்மையாக விளங்குவது காட்டுமன்னார்கோவில். காட்டுமன்னார்கோவிலிலிருந்து சிதம்பரம் 25 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, தமிழ்நாடு மற்றும் ஆந்திர மாநில போக்குவரத்துத் துறைகளுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதனடிப்படையில் காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பதிக்கு புதிய பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய*

கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 10-50

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'வாடிய பயிரை கண்டபொழுதெல்லாம் வாடி நின்ற' வள்ளல் பெருமகனார் மறைந்தும், மறையாமல் நிலைத்து நிற்கின்ற கடலூர் மாவட்டத்தில், அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தாலான பாதிப்புகளை நினைவிற்கொண்டு, நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ.140 கோடியை வாரி வழங்கிய ஒன்பதாவது வள்ளல், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்களுடைய ஒப்பற்ற தனிப்பெரும் தலைவர், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய சார்பிலும், மாவட்ட மக்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காட்டுமன்னார்கோவில் தொகுதிவாழ் தொழிலாளர்கள், வியாபாரிகள் மற்றும் பகுதி மக்களுடைய நலன் கருதி, காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பூருக்கு ஒரு புதிய அரசுப் பேருந்தினை இயக்குவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காட்டுமன்னார்கோவிலிலிருந்து திருப்பூருக்கு பேருந்து இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார். அந்த வழித்தடத்தில் பயணிக்கின்ற பயணிகளின் அடர்வுக்கேற்ப ஆய்வு*

2016 ஆகஸ்ட் 10]

செய்து, பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர், கழகத் தலைவர், கலைஞர் அவர்களை வணங்கி, என்னை திருவள்ளூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கிய என்னுடைய அரசியல் ஆசான், எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களை வணங்கி, *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னுடைய வெற்றிக்கு பாடுபட்ட தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும், கழக நிருவாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நிருவாகிகளுக்கும், அனைத்து நண்பர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

திருவள்ளூர் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய திருவள்ளூர்-திருத்தணி செல்லும் 93, 97H, 72A, 94 cut service, T2 ஆகிய எண் கொண்ட பேருந்துகள் கடந்த 6 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்த வழித்தடங்களில் மாணவர்கள், மக்கள் பயணம் செய்யும் வகையில், அந்தப் பேருந்துகளை மறுபடியும் இயக்குவதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட வழித்தடங்களில் கடந்த 6 ஆண்டுகளாக பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்று கூறினார்கள். அவர் ஆதாரத்துடன் புகாரைக் கொடுத்தால், அதை ஆய்வு செய்து, அந்த வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு வழிவகை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

திரு. எச். வசந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். போக்குவரத்துத் துறை மேலாண்மை இயக்குநர் அவர்களை நான் நேரில் சந்தித்து, 23 வழித்தடங்களில் பேருந்துகள் சரியாக இயக்கப்படவில்லை, சில இடங்களில் 1 கி.மீ.-லிருந்து 1½ கி.மீ. தூரம் பேருந்து வழித்தடத்தை நீட்டிப்பு செய்து கொடுத்தால் இரண்டு கிராமங்களிலுள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும் என்று கோரி மனு கொடுத்திருக்கின்றேன். இது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், திருநெல்வேலியிலுள்ள அதிகாரிகளை அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், களக்காட்டிலிருந்து சென்னைக்கும், மூலக்கரைப்பட்டியிலிருந்து சென்னைக்கும் புதிய வழித்தடங்களை ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது முறையாக தமிழகத்தில் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எந்தெந்த வழித்தடங்களில் பேருந்துகளை நீட்டிப்பு செய்ய இயலுமோ, அந்தந்த வழித்தடங்களில் எல்லாம் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுடைய வசதிகளைக் கருத்திற்கொண்டு, நீட்டிப்பு செய்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.***]**